1995 மார்ச் 15]

3. தகவல் கோரல்

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் மீண்டும் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறையிலேயே நான் உங்களுக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பொது விவாதத்தில் பேசுகிறபோது பேசலாம். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை இங்கே வந்து எழுப்பக்கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே வந்து எழுப்பக்கூடாது. (குறுக்கீடு) முக்கியமான பிரச்சினை என்று என்னுடைய அறையிலே வந்து கேட்டீர்கள். நானும் அனுமதி மறுத்திருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தகவலுக்குச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அவையில் எழுப்பலாம் என்பதற்கு நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. அறையிலேயே, அனுமதிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) என்னிடம் சொன்னால் நான் அனுமதிக்கவேண்டும் என்று அர்த்தம் இல்லை. (குறுக்கீடு) என்னிடம் சொல்கிற எல்லாவற்றையும் நான் அனுமதிக்க வேண்டும் என்பதில்லை. (குறுக்கீடு) பிரச்சினையினுடைய தன்மைக்கு ஏற்ப நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். என்னுடைய அறையிலே அனுமதி மறுத்ததை இங்கே வந்து எழுப்பக்கூடாது. (குறுக்கீடு) திரு. இராஜேந்திரன், நீங்கள் உட்காருங்கள். அவர் ஓர் உறுப்பினர். அவருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. நீங்கள் அவருக்கு வக்காலத்து வாங்க வேண்டியதில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் என்னிடம் அனுமதி கேட்டார். நானும் அனுமதி மறுத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் வேறு எழுந்து பேசவேண்டும் என்று என்ன இருக்கிறது? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே வந்து எழுப்பக்கூடாது என்பதுதான் விதி. (குறுக்கீடு) நான் என்னுடைய அறையிலேயே அனுமதி மறுத்திருக்கிறேன். அப்படி அனுமதி மறுத்ததற்குரிய காரணத்தையும்

உங்களிடத்தில் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு நீங்கள் வந்து இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) நான் அங்கே அனுமதி மறுத்ததை, இங்கே வந்து, நான் ஏன் அனுமதி மறுத்தேன் என்று விளக்கம் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அரசியல் ஆக்கலாம்.; ஆக்காமலும் இருக்கலாம்; அதற்கு நான் வரவில்லை. நான் அனுமதி மறுத்ததை இங்கே வந்து எழுப்ப முடியாது, உட்காருங்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எழுப்பி இருக்கிற பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை இங்கே சொல்லிவிட்டால், பிறகு இங்கே எழுப்பக்கூடாது என்று நான் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லையே! (குறுக்கீடு) நான் அவருக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். அப்படி அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே வந்து கேட்க முடியாது. அறையிலேதான் கேட்க வேண்டும். (குறுக்கீடு) இங்கே வந்து கேட்க முடியாது. அங்கே கேட்டபோதே நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் முறையில்லாமல் நடக்கவேண்டாம். அங்கே மறுத்தால் இங்கே வந்து பேசுவேன் என்று சொல்வது முறையல்ல. (குறுக்கீடு) அவர் என்ன பேசுவது, நானே பேசுகிறேன் என்று சொல்வது சரியல்ல. அவர் எழுப்ப அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை பற்றிக் கேட்க முடியாது. (குறுக்கீடு) விதிமுறைப்படி கேட்க முடியாது. (குறுக்கீடு) விதிமுறைப்படி நான் மறுத்ததை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அத்துமீறி நடப்பதாக இருந்தால் நான் அனுமதிக்க முடியாது. (கூச்சல்-குழப்பம்) எதிர்க் கட்சித் தலைவர் இப்படி கைநீட்டிப் பேசுகிற பேச்சை பலமுறை நான் பார்த்துவிட்டேன். நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் முறைகேடாக நடக்க வேண்டாம். (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் முறைகேடாக நடக்க வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். விதிமுறைப்படி நான் அங்கே மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்பலாம் என்பதற்கு என்ன விதி இருக்கிறது ?. (குறுக்கீடு) விதிகள் அத்தனையையும் தகர்த்து எறிந்துவிட்டு, நான்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 மார்ச் 15] [பேரவைத் தலைவர்]

எதிர்க்கட்சித் தலைவர், அப்படித்தான் நிற்பேன், பேசுவேன் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க்கட்சித் தலைவரின் விவாதம் முறைகேடானது என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. விதிமுறைகளைப் பாருங்கள். விதிமுறைகளின்படி நான் அனுமதி மறுத்த பிரச்சினையை எழுப்பலாம் என்பதற்கு எங்கே இடம் இருக்கிறது?. (குறுக்கீடு)

முற்பகல் 11-15

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். மைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வெளிநடப்புச் செய்வதை நான் தடுக்க முடியாது. இப்படி முறைகேடாகப் பேசுகிறீர்களே, அதைத்தான் நான் தடுக்க முடியுமே தவிர, நீங்கள் வெளிநடப்புச் செய்வதை நான் தடுக்க முடியாது. வெளிநடப்புச் செய்வது என்றால் செய்யலாம். அதற்கு மைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை (குறுக்கீடு). முறைகேடாக நடப்பதற்கு எப்படி நான் அனுமதிக்க முடியும் ? முறைகேடாக நடப்பவரை எப்படி நான் அனுமதிக்க முடியும்? முறைதவறி நான் பேசுவேன், பேச விடவேண்டும் என்று சொல்லுகிறீர்கள். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை அப்படித்தான் பேசுவேன் என்கிறீர்கள். முறைகேடாகவே இங்கே நடப்பது என்பதை அனுமதிக்கவே முடியாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பலமுறை முறைகேடாக நடந்தவர். இன்றைக்கும் முறைகேடாகத்தான் நடப்பேன் என்று சொன்னால் நான் அனுமதிக்க முடியாது (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதிக்காததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் திருமதி ஜீனத் சர்புதீன், திரு. ஆர். சிங்காரம், திரு. கே. செல்வராஜ், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. கே. கே. சின்னப்பன், திரு. இரா. அப்பு நடேசன் ஆகியோரைத் தவிர, அவையிலிருந்த மற்றவர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மட்டும் அல்லாமல், இதே முறையில், இதற்கு முன்னால் இருந்த பல பேரவைத் தலைவர்களும் 'Speaker's decision given in his Chamber should not be discussed in the House' என்பதே திரும்பத் திரும்ப இங்கே கொடுத்திருக்கின்ற

முடிவாகும், தீர்ப்பாகும். அதை நீங்கள் மீறி, அதில் பேச வேண்டும் என்றே இங்கே அடம்பிடிப்பது என்பதை எந்தவகையிலும் நியாயம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் முறைகேடாக நடப்பதை தன்னுடைய வழக்கமாகக் கொணடிருக்கிறார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: எங்களுக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நாங்களும் இதே மாதிரிச் செய்ய வேண்டுமென்று கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம் அவர்களும் பல பிரச்சினைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் அனுமதி மறுத்திருக்கிறேன். இதுபோல் எல்லா உறுபினர்களும் எழுப்பினால் அது முறைகேடாகத்தான் அமையும். திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் உங்களைப் பார்த்து கையை நீட்டிப் பேசுவது தவறானதாகும். அதற்கு நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையே அவர்கள் செய்து வருகிறார்கள். எல்லா சட்டமன்றக் கூட்டங்களிலும் நான் பார்த்திருக்கிறேன்; ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்பி வம்பு செய்வதற்கென்றே வந்திருக்கிறார். இதைக் கண்டிப்பாக நீங்கள் கண்டிக்க வேண்டும். இதற்காக இந்த என்டையர் செசனிலும் அவரை சஸ்பென்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நாங்கள் சட்டமன்றத்திற்கு வந்து ஒழுங்காகப் பேச முடியும். இல்லாவிட்டால் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பேச முடியாது. அவர்கள் ஏதேனும் கிளப்பி அவையின் முக்கியமான நேரத்தை வீணாக்குகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான அறிக்கையை அவைக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், இங்கே ஒரு பிரச்சினையைக் கிளப்பி வீணாக அவையின் நேரத்தை வீணாக்குகின்ற அவர்கள் எப்படிச் சட்டமன்றத்திற்கு வந்தார்கள் என்று தெரியவில்லை. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் மனிதன்தான். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னை புரவோக் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்கிறார்களா என்று தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் எல்லா மரியாதையும் கொடுத்துக் கொண்டிருப்பவன். இங்கே வந்து பேசவேண்டுமென்று ஆரம்பிக்கின்றபோதே, கையை நீட்டி ஏதோ எச்சரிக்கை செய்வதுபோல், ஆத்திரத்தை உண்டாக்கி,

1995 மார்ச் 15] [பேரவைத் தலைவர்]

அதன் காரணமாக ஒரு பிரச்சினை வராதா என்று எதிர்பார்த்துச் செய்வது போலத்தான் அவரது செயல் இருக்கிறது, அவர் எந்த நோக்கத்திற்காகச் செய்கிறார் என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை., அவருடைய உள்நோக்கம் அதுவாகத்தான் இருக்க முடியும். திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற எந்தக் கட்சியையும் சாராத சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் ஏதேனும் அத்துமீறி நடந்தால் நடவடிக்கை எடுக்கிறீர்கள், பொறுப்புள்ள ஒரு எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, சபாநாயகரிடமும், முதலமைச்சர் அவர்களிடமும், அமைச்சர்களிடமும் கண்மூடித்தனமாக நடந்து கொள்கிற இப்படிப்பட்டவர்கள்**

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு பிரச்சினையை என்னுடைய அறையிலே வந்து கவனத்திற்குக் கொண்டு வந்தார். அவர்கள் எழுப்ப வேண்டுமென்று சொன்ன பிரச்சினை அரசாங்கத்தின் எந்தத் துறைக்கும் நேரடியாகத் தொடர்பு இல்லாத பிரச்சினை என்கின்ற காரணத்தினாலேயும்-- இதைக் கேள்வி நேரம் முடிந்தவுடன் நீங்கள் எழுப்புகிறபோது எந்த அமைச்சரைப் பதில் சொல்ல அழைக்க முடியும்?—அந்தக் காரணத்தினாலேயும்தான் அனுமதி மறுக்கிறேன்; ஆனால், நீங்கள் பொது விவாதத்தில் ஆளுநருடைய உரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தில் பேசுகிறபோது பொதுவான பிரச்சினை என்ற அடிப்படையில் நீங்கள் பேசலாம்; அப்போது பேசுகிறபோது, எந்த வகையிலே யார் பதில் சொல்லவேண்டுமென்று, அரசு சார்பாக முடிவு செய்துவிடுவார்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தங்களுடைய பதில் உரையிலே பதில் சொல்லலாம்; அல்லது, அதற்கு -- அந்தப் பிரச்சினை தனக்குத் தெரியும் என்று சொன்னால், அதைப் பொறுத்து -- ஒரு அமைச்சர் பதில் சொல்லலாம்; எனவே, இந்த ஜீரோ ஹவரில் அனுமதிப்பதாக இருந்தால், நேரடியாக அரசாங்கத்தின் எந்தத் துறைக்கும் தொடர்பு இல்லாத பிரச்சினை என்ற காரணத்தினாலே நான் எந்த

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அமைச்சரை பதில் சொல்ல அழைக்கமுடியும்? எனவே, நான் அனுமதிக்க முடியாது என்று என்னுடைய அறையிலேயே சொல்லியிருந்தேன். அதே பிரச்சினையை இங்கே எழுப்ப முற்பட்டார். அதே பிரச்சினையை நானும் எழுப்புவேன் என்று அறிவிப்புக் கொடுக்காத எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அப்படித்தான் பேசுவேன் என்று பேசிய காரணத்தினாலேதான் இந்தப் பிரச்சினை எழுந்தது. (குறுக்கீடு) எனவே இந்த முறைகேடான முறையை, தொடர்ந்து பேரவை அனுமதிக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) வெளியிலே இருந்து குரல் எழுப்பியது ஆட்சேபணைக்குரிய ஒன்று. அப்படிப்பட்ட உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், வெளியிலே இருந்து இப்படிக் குரல் எழுப்பிய உறுப்பினர்மீது தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய ஒழுங்கு முறை., விதிமுறைகளை எல்லாம் தாங்கள் தெளிவுபடுத்தியதற்குப் பிறகும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய முறையற்ற போக்கினை நீடித்து கடைபிடித்து வந்ததன் காரணமாக முறையாக அமையவில்லை என்ற காரணத்தினாலேதான் அனுமதி மறுத்தீர்கள். அதையும் மீறி பேசிக்கொண்டிருந்து வெளியே போய்விட்டார்கள். வெளியே போனதற்குப் பிறகு, சட்டமன்றத்திற்குள்ளேதான் எந்தக் கருத்தையும் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறதே தவிர, சட்டமன்றத்திற்கு வெளியிலே, வளாகத்தில் இருந்து கூச்சல் போடுவது என்பது, அவையினுடைய உரிமைகள், கண்ணியம் போன்றவைகளை எல்லாம் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே, அதைப் பொறுத்து தக்க நடவடிக்கைகளை-- யார் என்று தெரியவில்லை, யார் என்று தெரிந்ததற்குப் பிறகு-- அவர்கள் மீது விசாரித்துதான் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காவலர்கள் மூலம் தெரிவிக்கப்படுவது, திரு. பி.வி. இராஜேந்திரன் என்ற உறுப்பினர், அவைக்கு வெளியிலிருந்து குரல் எழுப்பினார் என்பது.

1995 மார்ச் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தாங்கள் அவர் மீது உரிய நடவடிக்கையை அவைக்குத் தலைவர் என்ற முறையிலே எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு வெளியிலே இருந்து அவையின் உரிமையைப் பாதிக்கின்ற வகையில் குரல் எழுப்பிய அந்த உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு ஒரு நாள், பேரவைத் தலைவர் என்ற முறையில் நான், அவர் அவைக்கு வரலாகாது என்கின்ற கட்டளையை இடமுடியும். எனவே, அந்த உறுப்பினர் இன்று முழுவதும் அவைக்கு வரக்கூடாது என்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை. அது ஒன்றும் அவைக் குறிப்பிலே இருக்காது. பேரவைக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே, வெளியிலே இருந்து குரல் எழுப்பினால் அது எல்லாம் குறிப்பில் இருக்காது.

4. விதி 110-ன் கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு தொகுதி-1 பதவித் தேர்வுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான உச்ச வயது வரம்பு குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கிய அறிவிப்பு ஒன்றினைப் பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு அவர்கள் வெளியிடுவார்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-2-1995 தேதியிட்ட நாளிதழ்கள் சிலவற்றில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் குரூப்-1 உயர்பதவிகளுக்குப் போட்டியிட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் திடீரென தமிழக அரசு வயது உச்ச வரம்பை நிர்ணயித்துவிட்டது போலவும், அதனால் இந்த வகுப்பைச் சேர்ந்த மக்களுக்குப் பாதகம் ஏற்பட்டுவிட்டது போலவும் செய்திகள் வெளியாயின.

தமிழக அரசின்மீது குற்றம் சாட்டுவதற்கு ஏதாவது வாய்ப்புக் கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளும்,